**ஒதுக்கீட்டுத் தலைப்பு 179 – கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கை 2 பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## 1 ஆம் பகுதி

**கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| செலவுத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 281 | கமநல அபிவிருத்தித் திணைக்களம் |
| 284 | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 42,032,334,200 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 41,389,728,747 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் ஒவ்வொரு திணைக்களங்களினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 59,831,316 இற்கும் ரூபா 315,585,601 இற்கும் இடைப்பட்ட வீச்சில் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 0.16 சதவீத்திற்கும் 25.8 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதியேற்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாடு | | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 179 | கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | 36,576,704,200 | 146,030,000 | 36,575,583,279 | 87,319,605 | 1,120,921 | 58,710,395 |
| 281 | கமநல அபிவிருத்தித் திணைக்களம் | 3,260,080,000 | 829,100,000 | 3,259,933,493 | 562,057,971 | 146,507 | 267,042,029 |
| 284 | வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 483,070,000 | 737,350,000 | 480,680,671 | 424,153,728 | 2,389,329 | 313,196,272 |
| | மொத்தம் | 40,319,854,200 | 1,712,480,000 | 40,316,197,443 | 1,073,531,304 | 3,656,757 | 638,948,696 |

**(ஆ) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களினால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**

பல்வேறு கருமங்களுக்காக ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாவட்டச் செயலகங்களிடமிருந்து ரூபா 337,636,310 கூட்டுமொத்தமான நிதி ஏற்பாடு கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சுக்கும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்கும் கிடைத்திருந்ததுடன் அவற்றின் பயன்பாடுகள் தொடர்பான விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| ஏற்பாடு கிடைக்கப்பெற்ற அமைச்சு/ திணைக்களம் | ஏற்பாடு வழங்கிய அமைச்சு/ திணைக்களம்/மாவட்டச் செயலகம் | கிடைக்கப்பெற்ற நிதியேற்பாடு | பயன்பாடு | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 138,000,000 | 120,315,444 | 17,684,556 |
| -மேற்படி- | ஓய்வூதியத் திணைக்களம் | 1,226,626 | 1,226,626 | - |
| -மேற்படி- | கொழும்பு மாவட்டச் செயலகம் | 473,162 | 473,162 | - |
| -மேற்படி- | கம்பஹ மாவட்டச் செயலகம் | 540,000 | 335,479 | 204,521 |
| -மேற்படி- | விவசாய அமைச்சு | 213,540 | 197,146 | 16,394 |
| கமநல அபிவிருத்தித் திணைக்களம் | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 178,299,972 | 70,497,275 | 107,802,697 |
| -மேற்படி- | விவசாய அமைச்சு | 18,883,010 | 16,055,115 | 2,827,895 |
| | மொத்தம் | 337,636,310 | 209,100,247 | 128,536,063 |

## 2.2 வருமானக் கணக்குகள்

### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்

திணைக்களமொன்றினால் 2012 ஆம் ஆண்டின் போது 01 வருமானக் குறியீட்டிற்காக ரூபா 17 மில்லியன் தொகையான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் உள்ளபடியான வருமானமாக ரூபா 17.27 மில்லியன் சேகரிக்கப்பட்டிருந்தது. அதன் படி மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 101.6 சதவீத வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியானது | அதிகரித்துச் சேகரித்தல் | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | % |
| வனசீவராசிகள் பாதுகாப்பு பணிப்பாளர் நாயகம் | 20.03.02.06 | 17,000,000 | 17,268,785 | 268,785 | 101.6 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களத்திற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியா னவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 179 | 17901 | 3,500,000 | 3,465,427 | 3,000,000 | 4,475,012 | 30,000,000 | 16,291,392 |
| 281 | 28101 | 232,500,000 | 118,663,861 | 140,000,000 | 177,023,373 | 830,000,000 | 384,727,859 |
| 284 | 28401 | 40,000,000 | 36,746,640 | 27,000,000 | 33,101,943 | 127,000,000 | 117,544,304 |

## 2.4 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

**(அ) கட்டுநிதிக் கணக்கு**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் கமநல சேவைகள் மற்றும் வன சீவராசிகள் அமைச்சின் கட்டுநிதிக் கணக்கில் ரூபா 29,000 வரவு மீதியொன்று காணப்பட்டது.

**(ஆ) பொதுவைப்புக் கணக்கு**

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 02 திணைக்களங்களின் பொதுவைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 1,626,096,710 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| அமைச்சு/ திணைக்களம் | கணக்கு இல. | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | 6000/0000/00/0015/0188/000 | 345,824 |
| கமநல அபிவிருத்தித் திணைக்களம் | 6000/0000/00/0001/0010/000 | 15,700 |
| | 6000/0000/00/0002/0010/000 | 247,600 |
| | 6000/0000/00/0006/0051/000 | 262,330,182 |
| | 6000/0000/00/0015/0136/000 | 147,243,707 |
| வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | 6000/0000/00/0015/0139/000 | 102,096,520 |
| | 6000/0000/00/0006/0020/000 | 1,113,817,177 |
| மொத்தம் | | 1,626,096,710 |

## 2 ஆம் பகுதி

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பு தொடர்பான விபரமான அறிக்கை

### 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 179 – கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 யூலை 30 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கமநல சேவைகள் மற்றும் வனச்சீவராசிகள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகளைப் பேணியிருக்காமை

1989 மார்ச் 23 ஆந் திகதிய 19/89 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் மேலதிக நேரப் பதிவேடொன்று மீளாய்வாண்டிற்காகப் பேணப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) பாதீட்டு முரண்

(i) மீண்டெழும் செலவின விடயமொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 25,000 தொகையும் 03 மூலதனச் செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,675,000 தேறிய நிதி ஏற்பாட்டுத் தொகையும் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 05 மூலதனச் செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக அச்செலவின விடயங்களின் ரூபா 50,339,315 மொத்தமான தொகை அல்லது குறித்த தேறிய நிதி ஏற்பாட்டின் 40 சதவீத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் சேமிக்கப்பட்டிருந்தது.

### (இ) பொதுச் செலவின முகாமைத்துவம்

2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டில் வழங்கப்பட்ட மீண்டெழும் செலவினத்திலிருந்து 2 சதவீதமான ஏற்பாடுகள் அமைச்சினால் பிடித்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதிக் கணக்கில் 2011 ஆம் ஆண்டு முதல் நிலவி வருகின்ற ரூபா 29,000 வரவு மீதியொன்று காணப்பட்டதுடன் அம் மீதி 2013 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

17901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 235,468 கூட்டுமொத்தமாக இருந்தது.

## 1.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 – 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்காக அமைச்சினால் 2012 மே 23 ஆந் திகதி கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அத்திட்டம் கூட அமைச்சின் கருமங்களை உள்ளடக்கும் விதத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களின் கருமங்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தமையால் அது முழுமையற்ற திட்டமாக காணப்பட்டது. 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் அந்தந்த ஆண்டுகளின் தொடக்கத்தில் நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் உர மானிய நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 2,656,439,200 ஏற்பாட்டினை மேற்கொண்டு செலவுகள் செய்யப்பட்டிருந்த போதிலும், அக்கருமம் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் சேதனப் பசளை உற்பத்தி மற்றும் விநியோக நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 74,168,780 பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், அந்த நிகழ்ச்சித்திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**ஏனைய நிறுவனங்களுக்குரிய சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

ஏனைய 02 நிறுவனங்களுக்குரிய 02 வாகனங்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் முறைப்படி கையேற்கப்படாது அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 செயற்திட்டங்களை செயற்படுத்துவதிலுள்ள பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சேதனப் பசளைகளின் உற்பத்தி மற்றும் பாவனையினை தூண்டும் செயற்திட்டத்தின் பரிசோதனையில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அநுராதபுரம் மற்றும் பொலன்னறுவை ஆகிய இரண்டு மாவட்டங்களில் சேதனப் பசளை உற்பத்தியினை ஊக்குவித்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நலன்பெறும் விவசாயிகளால் உற்பத்திசெய்யப்படுகின்ற 1 கி.கி. இற்காக ரூபா 8.00 வீதம் செலுத்தப்பட்டிருந்தது. அநுராதபுரம் மாவட்டத்தில் 2,404,950 கி.கி. பசளையினை உற்பத்தி செய்வதற்காக ரூபா 19,239,600 செலுத்தப்பட்டிருந்த போதிலும், பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட மாதிரிகளில் உற்பத்திசெய்யப்பட்ட பசளையின் அளவினை உறுதிப்படுத்துவதற்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இரண்டு தடவைகளில் 74,359 கி.கி. பசளையினை உற்பத்தி செய்வதற்காக ரூபா 594,872 செலுத்தப்பட்டிருந்த போதிலும், ரூபா 55,072 பெறுமதியான 6,884 கி.கி. பசளையே உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

(ஆ) சேதனப் பசளை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக ஆர்வமுள்ள பொருத்தமான நபர்களை தெரிவுசெய்து உபகரணத் தொகுதிகளையும் பொருட்களையும் வழங்காதிருந்தமை காரணமாக இயங்காத அதிக எண்ணிக்கையான பிரிவுகள் அவதானிக்கப்பட்டன.

(இ) 2012 பெப்ரவரி 29 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் செயன்முன்னேற்றம் அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ஒரு மாதத்திற்குள் சேதனப் பசளை

உற்பத்தியினை ஊக்குவித்தல் வேலைத்திட்டமொன்றைத் தயாரித்து அதன் பொருத்தப்பாட்டை ஆய்ந்தறிவதற்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 1.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 3.2.1 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் அரசாங்கத்தினால் நிதி வழங்கப்படுகின்ற செயற்திட்டங்களிற்காக போட்டி கூறுவிலை கோரல் நடைமுறையினை பின்பற்ற வேண்டிய போதிலும், அதிலிருந்து விலகி 2012 மே மாதத்தில் அவசர தேவையெனக் கருதி 750 தகரத்தினாலான கொட்டில்களைக் கொள்வனவு செய்வதற்காக மட்டுப்படுத்திய விலைமனுக் கோரல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2013 சனவரி 12 ஆந் திகதியளவில் 03 சந்தர்ப்பங்களின் போது அவற்றில் 135 தகரக் கொட்டில்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. இக்கொள்வனவிற்காக அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் வழங்குனருடன் முறைப்படியான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டிருக்கவில்லை.

(ஆ) நெல் அல்லாத ஏனைய பயிர்களிற்காக உரங்களை இறக்குமதி செய்கையில் தனியார் உர இறக்குமதியாளர்களினால் சுமப்பதற்கு ஏற்பட்டிருந்த கிரயத்தினைக் காட்டிலும் கூடிய விலையொன்று உர விலைகள் தீர்மானித்தல் குழுவால் தீர்மானிக்கப்பட்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் அக் கம்பனிகளுக்கு மீளாய்வாண்டில் ரூபா 330 மில்லியன் மேலதிகமாக செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது.

## 1.8 நட்டங்களும் தேசங்களும்

2011 ஏப்ரல் 11 ஆந் திகதி வாகனமொன்று விபத்துக்குள்ளாகி ரூபா 147,312 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது. அது தொடர்பான ஆரம்ப விசாரணைகளில் குறித்த நட்டத்திற்குப் பொறுப்பான ஊடக செயலாளரிடமிருந்து அந்த நட்டத்தை அறவிடுவதற்கு தீர்மானமாகியிருந்த போதிலும், 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை நட்டம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 1.9 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இரண்டு மாவட்டங்களில் சேதனப் பசளையினை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 68,328,235 செலவிடப்பட்டு தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பான தெரிவுப் பரிசோதனையில் 06 கமநல சேவைகள் நிலையங்களில் 3,465 உபகரணத் தொகுதிகளில் 581 தொகுதிகளும், 82 புல் வெட்டும் இயந்திரங்களில் 05 இயந்திரங்களும், 22 தகரக் கொட்டில்களில் 11 கொட்டில்களும், 1,638 கி.கி. பொலித்தீன்களில் 973 கி.கிராம்களும் 2013 யூலை மாத இறுதியளவிலும் விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 40 கமநல சேவைகள் நிலையங்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 19 கமநல சேவைகள் நிலையங்களுடன் தொடர்புடைய விவசாயிகள் பசளையினை உற்பத்தி செய்திருக்கவில்லை.

## 1.10 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 19 | 16 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 110 | 79 | 31 |
| (iv) | ஆரம்ப நிலை | 35 | 35 | - |
| (v) | ஏனையோர் (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | 03 | 03 | - |
| | மொத்தம் | 170 | 135 | 35 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 35 வெற்றிடங்களை நிரப்பவதற்கு முடிந்திருக்கவில்லை.

(ஆ) முறையற்ற விதத்தில் ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள்

அமைச்சினால் முறையற்ற விதத்தில் ஏனைய நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படடிருந்த பதவியணியனரின் எண்ணிக்கை 06 ஆக காணப்பட்டதுடன் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | பாவியணியினர் வகை | பதவியணியினர் எண்ணிக்கை | மனித வளம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரப்பு | காலப்பகுதி |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 02 | கமநல அபிவிருத்தித் திணைக்களம் | 2010.11.26 முதல் 2013.08.31 வரை |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனி | 2010.11.26 முதல் 2013.08.31 வரை |
| (iii) | இரண்டாம் நிலை | 02 | இலங்கை உரக் கம்பனி | 2010.11.26 முதல் 2012.12.31 வரை |
| (iv) | ஆரம்ப நிலை | 01 | மக்கள் உர தொழில்முயற்சி | 2011.12.20 முதல் 2013.08.31 வரை |

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 281 – கமநல அபிவிருத்தித் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 செப்தெம்பர் 06 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஈ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4

இலிருந்து 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்**

கமநல சேவைகள் அபிவிருத்தித் திணைக்களத்தினால் 28101 ஆம் விடய இலக்கத்திற்கான அரசாங்க உத்தியோகத்தர்கள் முற்பணக் கணக்கு மீதான இணக்கக் கூற்று 01 மாதத்திற்கு மேலான தாமதத்தின் பின்னர் 2013 மே 07 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கமநல அபிவிருத்திக் குழுக்களின் நிதிக்கூற்றுக்கள் 2006 முதல் பின்வருமாறு கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

| | கணக்காண்டு | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| கமநல அபிவிருத்திக் குழுக்களின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் | 2006 | 87 |
| | 2007 | 112 |
| | 2008 | 87 |
| | 2009 | 78 |
| | 2010 | 95 |
| | 2011 | 126 |
| | 2012 | 284 |

**(ஆ) அரசாங்க செலவின முகாமைத்துவம்**

2011 திசெம்பர் 30 ஆந் திகதிய 155 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2012 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டினால் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து மீண்டெழும் செலவினத்திலிருந்து 2 சதவீதமான ஏற்பாடுகள் பிடித்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) பொது வைப்புக் கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 6000/0000/00/0006/0051/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கில் திணைக்களப் புத்தகத்திற்கும் திறைசேரிப் புத்தகத்திற்கும் இடையே ரூபா 651,797 வேறுபாடு 3 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக

நிலவியதுடன், அவ்வேறுபாடு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் இறுதியில் 6000/0000/00/0015/0136/000 ஆம் இலக்க பொது வைப்புக் கணக்கின் திணைக்களப் புத்தகத்திற்கும் திறைசேரிப் புத்தகத்திற்கும் இடையே ரூபா 49,811,908 வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் நிதிப்பிரமாணம் 427 இன் பிரகாரம் கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான இணக்கக் கூற்று**

(i) 28101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 26,330,303 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன. அந்நிலுவை மீதியில் பின்வரும் ரூபா 931,411 மொத்தமான காலம் கடந்த மீதி அவதானிக்கப்பட்டதுடன் அக் கடன் மீதியினை அறவிடுவதற்கு காத்திரமான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| கடன் வகை | கடன் மீதி |
|---|---|
| (அ) 2006 ஆம் ஆண்டில் சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாடு சென்ற உத்தியோகத்தர்கள் | 102,980 |
| (ஆ) 2006 ஆம் ஆண்டில் மாகாண சபைகளுக்கும் பிரதேச சபைகளுக்கும் போட்டியிட்டு தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் | 55,110 |
| (இ) மாகாண சபை உத்தியோகத்தர்களாக உள்வாங்கப்பட்ட கமநல சேவை உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்களாக உள்வாங்கப்பட்ட பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்கள் | 773,321 |
| மொத்தம் | 931,411 |

அவ்வாறே திணைக்களத்திற்கு உள்வாங்கப்பட்ட வடமேல் மாகாண சபை உத்தியோகத்தர்களின் ரூபா 593,000 கடன் மீதி 05 ஆண்டுகளிற்கும் மேலாக

நிலவி வருவதுடன் அம் மீதியினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தனிப்பட்டோர் மீதி வகைப்படுத்தலின் மொத்தத்திற்கும் கணக்கின் மீதிக்கும் இடையே ரூபா 2,674,352 வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அவ்வேறுபாட்டை ஒப்பிட்டு கணக்கினைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 2.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் திணைக்களத்தால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே குறிப்பிடப்பட்ட விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் திணைக்களத்தில் காணப்பட்டன.

| சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்திய காலம் |
|---|---|---|
| (அ) உத்தியோகபூர்வ வதிவிடங்கள் | 100 | 01 ஆண்டிற்கு மேல் |
| (ஆ) இயந்திர உபகரணங்கள் | 12 | 01 – 03 ஆண்டுகள் |
| (இ) வாகனங்கள் | 21 | 01 – 05 ஆண்டுகள் |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

மீளாய்வாண்டில் 06 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 29,637,925 மொத்தப் பெறுமதி கொண்ட அலுவலக உபகரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.6 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணக்கமின்மை |
|---|---|---|
| **(அ)** பொது நிதிச் சுற்றறிக்கை | | |
| 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | (i) அகற்றப்பட வேண்டிய 09 வாகனங்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை.<br>(ii) 143 கமநல சேவைகள் நிலையங்களுக்கு வழங்கப்பட்டிருந்த 443 விவசாய உபகரணங்கள் மெய்மையாய்வுச் சபையினால் அகற்றுவதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செய்யப்பட் டிருக்கவில்லை. |
| **(ஆ)** திறைசேரிச் சுற்றறிக்கை | | |
| 1978 இன் திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| **(இ)** திணைக்களச் சுற்றறிக்கை | | |
| 2012 செப்தெம்பர் 29 ஆந் திகதிய 014/2012 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 4.3 ஆம் பிரிவு | 393,262 | கமநல வங்கியொன்றில் கைவசம் வைத்திருக்கப்பட முடியுமான ஆகக்கூடிய தொகை ரூபா 10,000 எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அந்த எல்லையினை மீறி 08 வங்கிகளில் ரூபா 393,262 மொத்தமான தொகை கையில் வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. |

## 2.7 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் பலவீனங்கள்

செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடப்படுதல், செயற்திட்டங்களை முடிவுறுத்தாது கைவிடப்படுதல் மற்றும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் தொடர்பில் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனைகளில் வெளிப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

### (அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடுதல்

திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டடிய திகதி | ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம் சுருக்கமாக |
|---|---|---|---|
| | ரூபா | | |
| எல்லங்கா குளத்தினை திருத்தும் செயற்திட்டம் - கிரிதேவி குளம் தனமல்வில | 6,966,242 | 2012 சனவரி | குளத்தின் உரிமையினை தீர்த்துக் கொள்வதில் தாமதம் |

### (ஆ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

திணைக்களத்தால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் காணப்பட்டன.

| செயற்திட்டம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | முடிவுறுத்த வேண்டிய திகதி | மதிப்பீட்டுக் கிரயம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவினம் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | ரூபா |
| தலல்ல கமநல சேவைகள் நிலையத்தினை நிர்மாணித்தல் | | | | |
| கட்டம் I | 2010.12.29 | 2011.06.29 | 4,163,261 | 2,712,417 |
| கட்டம் II | 2011.12.12 | 2012.03.26 | 4,125,430 | 1,635,099 |
| பரங்கியாவாடிய கமநல சேவைகள் நிலையத்தினை புதுப்பித்தல் | 2012.01.28 | 2012.01.08 | 1,984,336 | 706,834 |

**2.8 செயலாற்றல்**

2012 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான கருமங்கள்**

(அ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2KR செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட டிரக்டர் மற்றும் தண்ணீர்க் குளாய்களுக்கான நிலுவைக் கடன் தவணைகள் முறையே ரூபா 552,689,784 மற்றும் 5,692,602 இனை அறவிடுவதற்கு தவறியிருந்ததுடன் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டிருந்த டிரக்டரை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 11 மாவட்டங்களில் 86 குளங்களை ஆழம் செய்வதற்காக இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 10 மாவட்டங்களில் 18 குளங்கள் மாத்திரம் ஆழம் செய்யப்பட்டிருந்தன.

(இ) 2012 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 10 உரக் களஞ்சியங்களை நிர்மாணிப்பதற்காக இலக்கிடப்பட்டு ரூபா 20 மில்லியன் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 2.6 மில்லியனை செலவிட்டு 2012 திசெம்பர் 31 ஆந் திகதியிளவில் 3 உரக் களஞ்சியங்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

**2.9 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

03 புல்டோசர் இயந்திரங்களை திருத்துவதற்காக ரூபா 1,639,180 செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த இயந்திரங்கள் சேவையில் ஈடுபடுத்தப்படாதிருந்ததுடன், மேலும் 03 இயந்திரங்களுக்கு திருத்தும் செலவினமாக ரூபா 2,176,231 இனை செலவிட்டு 252 இயந்திர மணித்தியாலங்கள் மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

**2.10 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**தீர்வு காணப்பட்டிருக்காத கணக்காய்வுப் பந்திகள்**

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகள் அரசாங்க கணக்குகள் குழுவினால் பரிசோதிக்கப்பட்டதன் பின்னர் பின்தொடர் நடவடிக்கைகள் முடிவடையாதுள்ள பந்திகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புடைய விடயம் | அரசாங்க கணக்குகள் குழுவின் கூட்டத் திகதி | அரசாங்க கணக்குகள் குழுவின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| **ஆண்டு** | **பந்தி இலக்கம்** | | | |
| 2005 | 06 | விளைவற்ற டிரக்டர்கள் | 2010.10.05 | யப்பானிய யென் உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்த இரட்டைச் சக்கர மற்றும் நாற் சக்கர பயன்படுத்த முடியாத டிரக்டர்களை அகற்றுதல் |
| 2005 | 07 | டிரக்டர்களிற்கான நிலுவைத் தவணைப்பணங்களை அறவிடுதல் | 2010.10.05 | தவணைப்பணங்களை அறவிட்டுக் கொள்வதற்கு காத்திரமான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்தல் |

## 2.11 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 95 | 58 | 37 |
| (ii) | மூன்றாம் நிலை | 737 | 541 | 196 |
| (iii) | இரண்டாம் நிலை | 10,872 | 9,762 | 1,073* |
| (iv) | ஆரம்ப நிலை | 322 | 231 | 82* |
| | மொத்தம் | 12,026 | 10,592 | 1,388 |

* வெற்றிடங்களை கணிப்பிடுகையில் 47 அங்கீகரிக்கப்பட்ட தட்டெழுத்தாளர்/சுருக்கெழுத்தாளர், 06 அங்கீகரிக்கப்பட்ட வெளிக்கள உதவியாளர்கள் மற்றும் 17 அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுவிக்கப்படாத தொழிலாளர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அச்சேவைகள் காலம் கடந்த சேவைகளாக இருப்பதனால் வெற்றிடங்களை கணிப்பிடுகையில் கருத்திற் கொள்ளப்படவில்லை.

## 3. ஒதுக்கீட்டுத் தலைப்பு 284 – வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

### 3.1 கணக்காய்வின் நோக்கெல்லை

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 செப்தெம்பர் 16 ஆந் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 3.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 3.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் வனச்சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள்

மற்றும் 3.4 இலிருந்து 3.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணிவந்திருக்காமை**

வனச்சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டுள்ள ஏடுகள் பேணப்பட்டிருக்காமை தெரிவுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| யானை வெடிகளை விநியோகித்தல் பதிவேடு | 2003 ஒக்தோபர் 16 ஆந் திகதிய வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் 15/2003 ஆம் இலக்க சுற்றறிக்கை |
| சுடுகலன்களை விநியோகித்தல் பதிவேடு<br>இரவைகளை விநியோகித்தல் பதிவேடு | 2009 நவம்பர் 08 ஆந் திகதிய வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் 5/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை |

**(ஆ) பொது வைப்புக் கணக்குகள்**

(i) 02 ஆண்டுகளைக் கடந்த ரூபா 11,406,008 கூட்டுத்தொகையான 46 வைப்பு விடயங்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஏனைய அமைச்சொன்றினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,259,831 தொகை குறித்த கருமத்தினை நிறைவேற்றாது வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு மீதான இணக்கக் கூற்று**

28401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 3,784,313 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுவதற்கான பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்பட்டன.

**3.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**3.4.1 கூட்டிணைந்த திட்டம்**

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது தொடர்ந்துவரும் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று திணைக்களத்தினால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் திணைக்களத்தால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 யூலை 10 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.3 உள்ளகக் கணக்காய்வு**

(அ) 2012 ஆம் ஆண்டின் போது உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டிற்குரிய உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தின் படி உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும் உதவிப் பதவியணியோ அல்லது திணைக்களத்தின் நோக்கெல்லையுடன் இணங்கியவாறு போதியளவு பதவியணியினரோ குறித்த பிரிவிற்கு இணைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

திணைக்களத்திற்குச் சொந்தமான 25 வாகனங்கள் விளைவற்றுக் காணப்பட்டமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு**

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க பொது நிதிப் பணிப்பாளரின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 9 ஆந்திகதிய 441 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் படி வருடாந்த கணிப்பீட்டுச் சபையினை 2013 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் நடாத்தி அவ்வறிக்கையினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்க வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் அவ்வறிக்கை 2013 மே 31 ஆந் திகதி வரைக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

திணைக்களத்தினால் முறையற்ற விதத்தில் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க மின்வலு அமைச்சிற்கு டபல்கெப் வாகனமொன்று விடுவிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமாகக் காணப்பட்ட 26 வாகனங்கள் அங்கீகாரமின்றி திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

**3.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ)** அதிகாரச்சட்டங்கள் | | |
| (i) வனசீவராசிகள் மற்றும் விருட்சகங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் (469 ஆம் அத்தியாயம்) 70(1) ஆம் பிரிவு | - | 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆலோசனைக் குழுக்கள் நியமிக்கப் பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) 2009 இன் 22 ஆம் இலக்க வனசீவராசிகள் மற்றும் விருட்சகங்கள் பாதுகாப்பு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 4.2 அ (2) ஆம் பிரிவு | - | தேசிய பாதுகாக்கப்பட்ட நிலங்கள் மற்றும் வழிபாட்டிடங்கள் என்பவற்றிற்காக முகாமைத்துவத் திட்டம் தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. |
| **(ஆ)** இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | |
| நிதிப்பிரமாணம் 104 | - | 2008 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 16 சந்தர்ப்பங்களிற்குரிய ஆரம்ப விசாரணைகள் நடாத்தப்பட்டு அந்த நட்டத்தின் அளவு மற்றும் பொறுப்புடைய தரப்பினர்கள் நிச்சயிக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(இ)** திறைசேரிச் சுற்றறிக்கை | | |
| 2002 நவம்பர் 08 ஆந் திகதிய IA/I/2002/2 ஆம் இலக்க சுற்றறிக்கை | - | கணனிகள் மற்றும் உபபாகங்களிற்காக சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட் டிருக்கவில்லை. |
| **(ஈ)** பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | |
| 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரமான 3.7 ஆம் பட்டோலை | 289,964 | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பில் கடன்பட்டோர் பட்டோலை யொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.7 செயற்திட்டங்களை அமுல்படுத்துவதில் பலவீனங்கள்

### (அ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்பீட்டுக் கிரயம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | முடிவுறுத்த வேண்டிய திகதி | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | | | ரூபா | |
| வஸ்கமுவ தேசிய பூங்காவில் கிரிஓய வீதி நிர்மாணம் | 9,402,250 | 2001.11.19 | 2002.03.19 | 1,283,767 | பொது மக்கள் முறைப்பாடுகள் பாராளுமன்றக் குழுவிற்கு முறையிடப்படல் |

**(ஆ) பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் அமுல்படுத்தப்படாத செயற்திட்டங்கள்**

திணைக்களத்தினால் 2012 ஆம் ஆண்டில் 07 மாவட்டச் செயலகங்களுக்கு யானை வேலிகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 14,294,311 விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அக்கருமம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**2.8 செயலாற்றல்**

2012 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயன்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

**(அ) போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான கருமங்கள்**

திணைக்களத்தின் பிரதான கருமங்கள் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) குமன தேசிய வனாந்திரத்தில் புதிய வீதி வலைப்பின்னலை நிர்மாணித்தல்

(ii) வில்பத்து தேசிய வனாந்திரத்தில் மாரவில பீட்டு அலுவலகத்தினை நிர்மாணித்தல்

(iii) குமன தேசிய பூங்காவில் தும்முல்ல சுற்றுலா விடுதி மற்றும் விடுதிக் காப்பாளரின் இல்லத்தினை நிர்மாணித்தல்

(iv) மன்னார் வனப் பாதுகாப்பு அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் தொழிலாளர் இல்லத்தினை நிர்மாணித்தல்.

(v)

**(ஆ) "கஜ மித்துரோ" செயற்திட்டம்**

காட்டு யானைகள் மனிதர்கள் மோதலினால் அல்லல்படுகின்ற 15 மாவட்டங்களின் 58 பிரதேச செயலகப் பிரிவுகளில் காட்டு யானைகள் மனித மோதல்களைத் தடுப்பது அடங்கலான 05 குறிக்கோள்களை செயற்படுத்துவதற்காக கஜ மித்துரோ செயற்திட்டம் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டிருந்தது. 2012 ஆம் ஆண்டினுள் ரூபா 200 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(i) 420 கி.மீ. யானை வேலியினை நிர்மாணிப்பதற்காக 31 சந்தர்ப்பங்களில் ரூபா 143.36 மில்லியன் நிதியேற்பாடு மாவட்டச் செயலகங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அந் நிர்மாணங்கள் இடம்பெற்றிருக்கவில்லை.

(ii) மின்சார வேலியினை நிர்மாணித்தல் தொடர்பில் செயல்நடவடிக்கைத் திட்டமொன்றைத் தயாரித்து யானைகள் மனிதர்கள் மோதல்கள் காணப்படுகின்ற பிரதேசங்களாக 08 மாகாணங்களிலுள்ள 14 மாவட்டங்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், அப்பிரதேசங்களிலுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளின் மீது கூடிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) 2012 ஆம் ஆண்டினுள் பிரதான அலுவலகத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 88.6 மில்லியன் கொண்ட மின்சார வேலி உபகரணங்கள் நேரடியாக உதவிப் பணிப்பாளர் அலுவலகத்தினூடாக லுனகம்வெஹர பொருட் களஞ்சியத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அந்தக் களஞ்சியத்திலிருந்து குறித்த நிர்மாணங்களுக்காக வழங்குகையில் முறையான உள்ளகக் கட்டுப்பாடும் இருப்புக் கட்டுப்பாட்டு நடைமுறையும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே, யானை வேலியினை நிர்மாணித்தல் தொடர்பான பின்தொடர் நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை.

(iv) யானைகள் மனிதர்கள் மோதலினால் சம்பவிக்கின்ற உயிரிழப்புக்கள், ஆதனங்கள் மற்றும் பயிர்ச் சேதங்களைக் குறைக்கும் நோக்குடன் வீறுகொண்ட ஆண் யானைகளை தடுத்து வைத்து சீர்திருத்துவதற்காக ஹொரவப்பத்தானை யானைகள் தடுத்துவைத்தல் நிலையத்தினை நிறுவுவதற்கு 16 கி.மீ. மின்சார வேலியினை நிர்மாணிப்பதற்காக 1050 கொங்ரீட் கம்பங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 96.74 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும், அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. திணைக்களத்தின் பிரதான

குறிக்கோளான வனசீவராசிகள் மனிதர்கள் மோதல்களைக் குறைப்பதற்கான முறையொன்றை இனங்காணல், அமுலாக்கல் மற்றும் காலத்திற்கேற்ற வனசீவராசிகள் முகாமைத்துவத் திட்டமொன்றைத் தயாரித்தல் போன்ற செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(v) உள்நாட்டு உயிரினங்கள், முலையூட்டிகள் மற்றும் அவை உயிர்வாழும் இயற்கைச் சூழலை பாதுகாத்தல் திணைக்களத்தின் பிரதான குறிக்கோளாக காணப்பட்டது. யானைகளை விரட்டியடிப்பதற்காக உயிரினங்களை கடுமையாக வேதனைப்படுத்தும் யானை வெடிபொருட்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 34,863,405 செலவிடப்பட்டிருந்தது. அதன் படி, உள்நாட்டு மிருகங்கள் மற்றும் அவை உயிர்வாழும் இயற்கைச் சூழலை பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(vi) யானைகள் மனிதர்கள் மோதல்களைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் மற்றும் திட்டங்கள் தோல்வியடைந்திருந்தன.

## 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகள் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் கிரிதலே பயிற்சி நிலையத்தினால் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வெளித்தரப்பினர்களால் ஆராய்ச்சிக் குழுக்களிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஆராச்சிக் குழுக்கள் மாற்றங்களுக்கு உட்படுத்தப்படாது 12 ஆண்டுகள் செயற்பட்டிருந்தமை, செயற்திட்ட அறிக்கைகளின் பிரதிகள் எதுவும் பயன்பாட்டிற்காக நூலகத்தில் வைத்திருக்கப்பட்டிருக்காமை, ஆராய்ச்சி செயற்திட்டங்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்காமை, ஆராய்ச்சி செயற்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு வனசீவராசிகளின் பாதுகாப்பிற்காக திணைக்களத்தினால் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை போன்ற பலவீனங்கள் காணப்பட்டன.

(ஆ) அங்கம்மெடில்ல தேசிய பூங்காவினுள் யானைகள் தரிப்பிடத்தினை நிர்மாணிப்பதற்காக 2008 ஆம் ஆண்டில் ரூபா 4.57 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் யானைகளை ஏற்றுதல் மற்றும் இறக்குதலுக்காக

மேடையொன்றை நிர்மாணிப்பதற்கு ரூபா 193,393 செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த இடம் புதர்களால் சூழப்பட்டு விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) அலுவலகங்களில் யானை வெடிகளை வழங்குதல் பதிவேடு, யானைகள் மரணித்தல் பதிவேடு, இரவைகள் விநியோகித்தல் பதிவேடு, தவறிழைத்தல் அறிக்கைகள் பதிவேடு, வாகனங்கள் பதிவேடு போன்ற பதிவேடுகள் முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வனசீவராசிகள் மற்றும் விருட்சகங்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் (469 ஆம் அத்தியாயம்) 6(1)(ஊ) ஆம் பிரிவின் பிரகாரம் எந்தவொரு ஆளினாலும் தடைசெய்யப்பட்ட வனாந்திரம், தேசிய வனப்பூங்கா, பாதுகாக்கப்பட்ட நிலப்பிரதேசத்தில் பிரவேசித்தல், பாதுகாக்கப்பட்ட இடத்தில், கடல்சார் பாதுகாக்கப்பட்ட பிரதேசம் அல்லது எல்லைப் பிரதேசத்தில் பயிரிடுதல், சுரங்கமறுத்தல், அல்லது ஏனைய எந்தவொரு கருமத்திற்காகவும் ஏதேனும் நிலத்தினை சுத்தப்படுத்தல் அல்லது அகழ்தல் கூடாது. அதற்கு முரணாக இவ்வலயத்தினுள் சட்டவிரோதமாக 222.5 ஏக்கர் நிலப்பரப்பில் போதைப்பொருள் பயிரிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இவ்வலயத்தினுள் திணைக்களத்திற்குச் சொந்தமான 11 வன அலுவலகங்களும் 12 பாதுகாப்பு அலுவலகங்களும் சுற்றி வளைப்புப் பிரிவொன்றும் தாபிக்கப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தின் முறையற்ற கட்டுப்பாடு மற்றும் தொடர்ச்சியான பரிசோதனைகளிலுள்ள குறைபாடுகள் காரணமாக சட்ட விரோதமான கஞ்சா பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தது. 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை இந்த 222.5 ஏக்கர் கஞ்சா பயிர்ச்செய்கை 336 சந்தர்ப்பங்களில் சுற்றிவளைக்கப்பட்டு 1,125,582 கஞ்சா செடிகள் மதுவரித் திணைக்களத்தினால் கண்டுபிடிக்கப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பில் பணிப்பாளர் நாயகம் அறிவுறுத்தப்பட்டிருக்கவில்லை.

அதிகாரச்சட்டத்தின் 2(அ) பிரிவின் படி ஏதேனும் தேசிய பாதுகாக்கப்பட்ட நிலத்தினுள் பணிப்பாளர் நாயகத்தால் குறிப்பிடத்தக்களவு வசதிகள், சேவை நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டிய போதிலும், இவ்வாறு சட்டவிரோதமாக காடுகள் அழிக்கப்படுவதனால் பொருத்தமான முகாமைத்துவம் இடம்பெறாமையால் திணைக்களத்தின் பிரதான குறிக்கோளான வனசீவராசிகள் மற்றும் விருட்சகங்களைப் பாதுகாப்பதற்காக வனசீவராசிகள் மற்றும் விருட்சகங்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தினை அமுல்படுத்தல் உரியவாறு இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக

வனசீவராசிகளின் உயிர்வாழ் இடங்கள் இழக்கப்படுகின்றமையால் யானைகள் மனித மோதல்கள் தீவிரமடைந்துள்ளன.

## 3.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 70 | 32 | 38 |
| (ii) | மூன்றாம் நிலை | 18 | 18 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1401 | 881 | 520 |
| (iv) | ஆரம்ப நிலை | 418 | 294 | 124 |
| | மொத்தம் | 1907 | 1225 | 682 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 682 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.